**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.1242/2025 | Date | : 18.05.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.2 | Taluk | : |
| Name | : **பாலசுப்பிரமணியம்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.05.2026

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது சித்தோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.09.2025ம் தேதி மதுவிலக்கு தொடர்பாக குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு தலைமை காவலர் மூர்த்தி மற்றும் காவலர் அஜித் ஆகியோருடன் நான் சித்தோடு பகுதியில் ரோந்து செய்தும், பின்னர் சித்தோடு காவல்நிலைய சரகம், சித்தோடு ஆவின் பால்பண்ணைக்கு எதிரே உள்ள காலியிடத்தில் 19.30 மணிக்கு ரோந்து செய்து கண்காணித்துக்கொண்டிருந்தபோது, ஒரு நபர் எங்களை பார்த்தவுடம் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரிக்க பெயர் ராதா த/பெ. கலியுகம், என்று கூறினார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் ராதா ஆவார்.

2. பின்பு அவர் வைத்திருந்திருந்த பிளாஸ்டிக் கவரை சோதனை செய்துபார்த்தபோது, அரசு மதுபானமான சுமார் 180 ML பிடிக்கக்கூடிய BLACK PEARL BRANDY பாட்டில்கள் – 26ஐ வைத்திருந்தார். அது குறித்து அவரிடம் விசாரிக்க அரசு அனுமதியின்றி அரசு நிர்ணயித்த நேரத்திற்கு முன்பாக அரசு மதுபானங்களை அதிக விலைக்கு பிராந்தி (மது) பாட்டில்களை பொதுமக்களுக்கு விற்க

நின்றுகொண்டிருந்ததாக கூறியவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை நான் அன்றே 21.00 மணிக்கு சித்தோடு காவல்நிலையத்தில் ஆஜராகும்படி அறிவுறுத்தி சம்மன் சார்வு செய்தபோது எதிரி ராதா வாங்க மறுத்துவிட்டதால் இரவு 20.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், உறவினர்களுக்கு தெரிவித்தேன்.

3. பின்பு 20.15 மணிக்கு 180 ML பிடிக்கக்கூடிய BLACK PEARL BRANDY – 26 பாட்டில்களை பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் உடனிருந்த காவலர் அஜித் மற்றும் தலைமை காவலர் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அதில் சாட்சியாக இருவரும் கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர் நான் தயார் செய்ததுதான். அன்றே இரவு 20.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் சித்தோடு காவல்நிலையம் சென்று குற்ற எண். 424/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்பு சாட்சிகள் தலைமை காவலர் மூர்த்தி மற்றும் காவலர் அஜித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்தினை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு எனது புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT 2024 ன் படி குற்ற அறிக்கை தாக்கல்செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. பொதுமக்கள் யாரும் இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோன்று பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அதிக விலைக்கு விற்பனை செய்ததாக கூறியுள்ள நிலையில் எவ்வளவு விலைக்கு விற்பனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபானங்களை விற்பனை

செய்ததாக கூறியுள்ள நிலையில் அவ்வாறு விற்பனை செய்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. மதுபானங்கள் வைத்திருந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் கவரை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மதுபானங்கள் கைப்பற்றப்பட்டது என்று கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்குக்காக எதிரியின் மீது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.05.18 17:01:48 -0800

Judicial Magistrate No.III,

Erode.